

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி கண்டாச்சிபுரம் தாலுகா அலுவலகத்தில் ஜமாபந்தி நிறைவு விழாவில் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. இலவச வீட்டு மனை பட்டா, குடும்ப அட்டைகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன் , பி.விஆர்.சு. விஸ்வநாதன், அ.சா.ஏ.பிரபு, எஸ் லூயிஸ், ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஸ்வரன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் எம்.ஆர்.ராஜீவ் காந்தி, பேரூராட்சி மன்ற தலைவர் ராயல் எஸ். அன்பு, முன்னாள் ஒன்றிய செயலாளர் பிரேமா அல்போன்ஸ், ஊராட்சி மன்றத் தலைவர் ரவிக்குமார், வட்டாட்சியர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



விருத்தாசலம் முன்னாள் நகரக் கழகச் செயலாளர் குருபத்மநாபன், தலைமைக் கழக பேச்சாளர் கோபி ஆகியோரின் மறைவுக்குப் பின் அவர்களது குடும்பம் மிகவும் நலிவுற்றதை அறிந்த கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் தமது பரிந்துரையில் கழக இளைஞரணி அறக்கட்டளை சார்பில் கழக இளைஞரணி செயலாளர்–துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ரூபாய் 25 ஆயிரத்திற்கான வங்கி வரைவோலை வழங்கியதை குருபத்மநாபன் குடும்பத்தினரிடம் மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் சி.வெ. கணேசன் வழங்கினார். உடன் க.தண்டபாணி, தி. வேல்முருகன், எஸ்.இராமு, அரங்க. பாலகிருஷ்ணன், நம்பிராஜன், ஆட்டோ பாண்டியன் பொன்.கணேஷ், நிஷாந்த்,கார்த்தி,மணிவன்னன்,வழக்கறிஞர் இளங்கோவன்,பாசில் மற்றும் பலர் உள்ளனர்.

### தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் பா.ஜ.க.வின் அடிமையாகப் பேசுகிறார் பழனிசாமி!

# கமலாலயத்தின் கருத்தை தன்னுடைய கருத்தாக பேசுவதற்கு பழனிசாமி வெட்கப்பட வேண்டும்!

## இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



சென்னை, ஜூன் 8-

இதுகுறித்து அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

‘தொகுதி மறுசீரமைப்பு எப்போது நடந்தாலும் அதில் தமிழ்நாட்டின் உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது என்பதை ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்த போதே தெரிவித்தது நான்’ எனச் சொல்லியிருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி.

சட்டமன்ற கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போது யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் சத்தமே இல்லாமல் கடந்த மார்ச் 25 ம் தேதி டெல்லியில் போய் பழனிசாமி எதற்காகப் போய் இறங்கினார்? டெல்லியில் செய்தியாளர்கள் கேட்ட போது, “பிரத்யேகமான நபரைப் பார்க்க வரவில்லை. டெல்லி அதிமுக அலுவலகத்தைப் பார்க்க வந்தேன்” என ஏன் பொய் சொன்னார்? கள்ளக் கடத்தல்காரர்கள் மாதிரி கார்கள் மாறி மாறி சென்று, பழனிசாமி இறங்கிய இடம் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா வீடு.

பா.ஜ.க.வுடனான கள்ளக் கூட்டணியை நல்ல கூட்டணி ஆக்கப் போனவர், தொகுதி மறுசீரமைப்பு பற்றிப் பேசினாராம். இன்றைக்குப் புதுக்கதை எழுதுகிறார். “ஒரு மனுஷன் பொய் பேசலாம். ஆனா, ஏக்கர் கணக்கில் சொல்லக் கூடாது. அது எப்படிடா? நெஞ்சுல கொஞ்சம் கூட ஈரம் இல்லாமல் இவ்வளவு பெரிய பொய் சொல்லுற” என்று செந்திலை பார்த்து கவுண்டமணி சொல்லும் காமெடி போல இருக்கிறது.

பா.ஜ.கவைப் பார்த்து கோரிக்கை வைக்கவே பழனிசாமிக்கு துப்பில்லை; வக்கில்லை; மானமில்லை. இவர் ‘தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான என் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை’ என்கிறார். கமலாலயத்தில் எழுதிக் கொடுக்கும் பேச்சுகளை எல்லாம் தன்னுடைய மவுத் பீஸில் பேசுவதற்கு பழனிசாமி வெட்கப்பட வேண்டும்.

**பாசிச பா.ஜ.க.வின் சதித்திட்டம்!**

மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பை நடத்தி, தமிழ்நாட்டில் நாடாளுமன்ற இடங்களைக் குறைப்பதுதான் பாசிச பா.ஜ.க.வின் சதித் திட்டம். இந்தச் சதியை நாட்டிலேயே முதன்முதலாக அம்பலப்படுத்தி அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருபவர் தமிழ்நாடு முதலமைச்சர்தான்.

தொகுதி மறுசீரமைப்பை எதிர்த்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தினார் முதலமைச்சர்; தொகுதி மறுசீரமைப்பால் பாதிக்கப்படும் மாநிலங்களின் முதலமைச்சர்கள், அரசியல் கட்சித் தலைவர்களை எல்லாம் சென்னையில் அழைத்து கூட்டம் போட்டது திராவிட மாடல் அரசு; அந்த பிரச்சினைக்காக பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதினார் முதல்வர் மு.க.ஸ்டாலின்; நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தார்கள் தி.மு.க. கூட்டணிக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

இப்படி எதாவது ஒரு வகையில் தொகுதி மறுசீரமைப்புக்காக எதிராக ஒரு பேச்சோ, எழுத்தோ அ.தி.மு.க. பதிவு செய்திருக்கிறதா? அதனைக் கேள்வி கேட்டால், ’அமித்ஷாவிடம் பேசினேன். ஒன்றிய அரசிடம் குரல் கொடுத்தேன்’ என கலர் கலராக ரீல் விடுகிறார் பழனிசாமி.

**எடப்பாடி பழனிசாமியின் உலக மகா உருட்டு!**

பா.ஜ.க.வின் பாசிசத் திட்டத்தை முதலமைச்சர் அம்பலப்படுத்தியவுடன் அவர்களைக் காப்பாற்றப் புரளி நாடகத்தைக் காட்ட வந்துவிட்டார் கோழை சாமி! இந்தித் திணிப்பு, தொகுதி மறுசீரமைப்பு எனத் தமிழ்நாட்டை ஆதிக்கம் செய்யும் பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்துக் கொண்டு அதை எதிர்ப்பேன் என்கிறாரே பழனி சாமி இதுதானே உலக மகா உருட்டு!

மாநிலங்களை ஒழித்துக் கட்டி நாட்டின் கூட்டாட்சி ஏற்பாட்டைச் சிதைக்க வேண்டும் என்பதுதான் பா.ஜ.க.வின் சதித்திட்டம் அதற்கு ஒரு வழியாகத்தான் தொகுதி மறுசீரமைப்பை பா.ஜ.க. பயன்படுத்த இருக்கிறது என்பது சின்னக் குழந்தைக்கும் தெரியும், சின்னப் புத்தி கொண்ட பழனி சாமிக்குத்தான் தெரியாது.

தமிழ்நாட்டின் உரிமைகளைக் காவு கொடுப்பதையே வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு செயல்படும் பழனிசாமி தனது டெல்லிப் பண்ணையார்களின் மனதைக் குளிர்விப்பதற்காக உதிர்க்கும் உளரல்களால் தான் ஒரு சிறந்த அடிமை என்பதை மணிக்கு ஒரு முறை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.

**பழனிசாமியின் இரட்டை வேடம்!**

தொகுதி மறுசீரமைப்புக்கு எதிரான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்து விட்டு, வெளியே வந்து ஒன்றிய பா.ஜ.க. அரசைத் தாஜா செய்வதற்காக ஜெயக்குமார் பேட்டி கொடுத்த டபுள் ரோல் கட்சிதானே அ.தி.மு.க. அனைத்துக் கட்சி கூட்டத்தில் உள்ளே ஒன்று பேசுவதும், வெளியே பா.ஜ.க.வின் மனம் நோகாமல் பேசுவதும் என இரட்டை வேடம் போட்டவர்தானே பழனிசாமி.

உறுதியாக... அறுதியாக... தாய் மீது ஆணையாக... ‘பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை’ என்றெல்லாம் சிலகாலம் வரை சொல்லி அ.தி.மு.க. தொண்டர்களை ஏமாற்றி, தமிழ் நாட்டு மக்களை நம்ப வைத்து கடைசியில் கழுத்தறுத்துவிட்டு அமித்ஷா காலில் விழுந்த கோழை பழனிசாமி பேசுகிறார். ‘தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான என் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை’ என்று.

பா.ஜ.க. கூட்டணி நிலைப்பாட்டிலேயே மாற்றம் கண்டவர். தொகுதி மறுசீரமைப்பு நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை எனச் சொன்னால் கேட்கிறவன் கேனையனா இருந்தா கேப்பையில் நெய் வடியுதுன்னு சொல்வாங்க என்ற பழ(னிசாமி)மொழி தான் நினைவுக்கு வருகிறது.

பா.ஜ.க.வோடு ஒட்டும் இல்லை. உறவும் இல்லை எனக் கூறி வந்த அ.தி.மு.க., அப்படியே UTurn அடித்து கமலாலயம் பக்கம் வண்டியைத் திருப்பியது போலத் தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்திலும் தன் நிலைப்பாட்டை மாற்றிவிட்டு இன்று வியாக்கியானம் பேசுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ‘வாட்ஸ் அப்’பில் வரும் செய்தி!




